00329

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித் துறை

சிறப்பு கல்விமாணி (ஆரம்பக் கல்வி) நிகழ்ச்சித்திட்டம் -2021/2022 -மட்டம்-3

இறுதிப் பரீட்சை - 2023

**EPU 3532** – கலைத்திட்ட கற்கையும் செய்கையும் - மொழிக் கற்கை.

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 14.01.2023 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

பகுதி **I**

1. 'மொழி' என்றால் என்னவென வரையறுக்க.
2. மொழியின் செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. மொழியாற்றலின் கட்டங்கள் எவை?
4. "பிள்ளையொன்றின் சொற்களஞ்சியத்தை இரண்டாக வகைப்படுத்தலாம்" அவையெவை? சுருக்கமாக விளக்குக.
5. மொழிக் கற்றலில் ஊடகங்களின் ஆதிக்கத்தை சுருக்கமாக விளக்குக.
6. முன்பள்ளிப் பிள்ளையின் முன் எழுத்துத் திறன்களை விருத்திசெய்வதற்கு பொருத்தமான மூன்று (03) செயற்பாடுகளை உருவாக்குக.
7. மொழித் தேர்ச்சியில் கணிப்பீட்டின் குறிக்கோள்களை சுருக்கமாக விபரிக்க.
8. மொழித் தேர்ச்சியைக் கணிப்பிடுவதற்கான மூன்று (03) கருவிகளை சுருக்கமாக விளக்குக.

**(8x5=40** புள்ளிகள்)

## பகுதி II

9.

(i) ஆரம்பக் கல்வி மாணவரின் மொழித் திறன் விருத்தியில் கவனத்தில்கொள்ளப்படவேண்டிய நான்கு (04) காரணிகளை விபரிக்க.

(10 புள்ளிகள்)

(ii) "மொழிக் கற்றல் என்பது ஒரு தொடர்ச்சியான செயலொழுங்காகும்." இக் கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையை நியாயப்படுத்துக

(10 புள்ளிகள்)

10.

(i) 'பிள்ளையின் வீட்டுச் சூழலானது அதன் மொழிவிருத்தியில் நேரடியாகப் பங்களிக்கிறது.'

இக் கூற்றை நியாயப்படுத்த காரணங்கள் தருக.

(10 புள்ளிகள்)

(ii) முன்பள்ளிப் பிள்ளைகளின் மொழிவிருத்தியில் நேரான விருத்தியை வழங்குவதற்காக முன்பள்ளி ஆசிரியர்கள் எவ்வாறான பங்களிப்பினை வழங்கலாமென உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

(i) "ஊடகங்கள் புதிய பரிமாணங்களை திறந்துள்ளன". இக்கூற்றினை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(ii) பிள்ளைகள் வெகுஜன ஊடகங்களைப் பயன்படுத்துவதில் பெற்றோரின் பொறுப்புகள் எவையென உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

12.

(i) ஆரம்ப பிரிவில் உள்ள ஏதாவது ஒரு வகுப்பினைத் தெரிவுசெய்து, அந்த வகுப்புப் பிள்ளைகளின் செவிமடுத்தல் தொடர்பாக ஒரு பிரச்சினையை தெரிவுசெய்க. பிள்ளைகள் இந்தப் பிரச்சினையில் இருந்து விடுபட மூன்று (03) பொருத்தமான செயற்பாடுகளை விதந்துரைக்க.

(10 புள்ளிகள்)

(ii) மேலே நீங்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு செயற்பாட்டினையும் அமுலாக்க பொருத்தமான கற்பித்தல் முறைமைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

(i) முன்பள்ளிப் பிள்ளைகளிடத்தே முன்பள்ளி ஆசிரியர்களால் விருத்திசெய்யக்கூடிய முன்மொழி எண்ணக்கருக்களை பட்டியலிடுக.

**(5 புள்ளிகள்)**

(ii) மேலே நீங்கள் பட்டியலிட்ட எண்ணக்கருக்களில் ஏதாவது மூன்றினைத் தெரிவுசெய்து ஒவ்வொரு எண்ணக்கருவினையும் விருத்திசெய்ய பொருத்தமான செயற்பாடுகளை எழுதுக.

(6 புள்ளிகள்)

(iii) இந்த மொழி எண்ணக்கருக்களை விருத்திசெய்வதில் முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை?

**(4 புள்ளிகள்)**

(iv) மேலே நீங்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளுள் ஏதாவது இரண்டினைத் தெரிவுசெய்து அவற்றிற்கான தீர்வுகளை முன்வைக்க.

(5 புள்ளிகள்)

*பதிப்புரிமைபெற்றது*